# ஐக்கிய இராட்சியத்தில் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு தைமாதம் 30ம் 31ம் திகதிகளில்

அன்பார்ந்த பிரித்தானியாவாழ் ஈழத்தமிழ் பேசும் மக்களே!

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை மீள் உறுதிப்படுத்துவோம்!

எமது இழந்த இறைமையை (Sovereignty) மீழப் பெறுவோம்!

எமது அரசியல் உரிமையை நாமே நிர்ணயிப்போம்! (Independent state)

எமது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் (Right to self-determination) சுதந்திர இறையாண்மையுள்ள, தனித்துவமான தேசியத்தையும் (Tamil nation hood) பூர்வீக தாயகத்தையும் (Traditional Tamil Home Land) உடைய நாம், இக்கருத்துக்கணிப்பு மூலம் ஈழவர்களின் அபிலாசைகளை உலகுக்கு உரத்துக் கூறுவோம்.

உலகில் நாடற்றவர்களாக இருந்த யூதர்கள் தமக்கென ஓர் நாட்டை மத்திய கிழக்கில் உருவாக்கினார்கள். அதுதான் இஸ்ரேல் எனக்கூறப்படும் நாடு. எம்மைப்பொறுத்தவரை எமக்கென்று ஓர் நாடு இருக்கின்றது. அது எமது கையைவிட்டுப் போய்க்கொண்டிருக்கின்றது. இதற்குத் தடைபோடக்கூடியவர்கள் புலம்பெயர் ஈழத்தமிழ்பேசும் மக்களே. எத்தனையோ இனங்கள் தமது புலம்பெயர்ந்த இனமக்களின் உதவியினாலேயே தமது இழந்த நாட்டையும் உரிமைகளையும் பெற்றுள்ளனர். இன்று ஈழவர்கள் உலகில் 47 நாடுகட்குமேல் வாழ்கின்றனர். எங்கிருந்தாலும் இவர்கள் ஈழத்தமிழ்பேசும் மக்களே.

இவர்கள் தமது வரலாற்றுக் கடமையான இராஜதந்திர நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். அதன் முதற்படிதான் இக்கருத்துக்கணிப்பு நடவடிக்கை. இது புலம்பெயர் தமிழ்பேசும் மக்கட்கு தமது ஜனநாயக இராஜதந்திர நடவடிக்கைகட்கான நம்பகத்தன்மையைக்(Legitimation) கொடுக்கும்.

ஈழப்போராட்டம் புலம் பெயர் மட்கட்கு வந்துள்ள நிலையில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை மீள் உறுதிப்படுத்துவதற்கான வாக்கெடுப்பு நடாத்தவேண்டிய நிலை ஓர் காலத்தின் வரலாற்றுக் கட்டாயமாகும்.

இவ் மீள் வாக்கெடுப்பு நோர்வே, பிரான்சு, கனடா, நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து, யேர்மனி ஆகிய நாடுகளில் வெற்றிகரமாக நடந்து முடிந்துவிட்டது.

பிரித்தானியா உலகில் முக்கியமான ஓர் நாடு. இவர்கள் எமது முன்னைய ஆட்சியாளர்கள்.

இவர்களாலேயே எமது இறைமை சிங்களவர்கள் கைக்கும் போனது. இந்நாட்டில் இருந்த வேறு இனப் புலம்பெயர் மக்களின் நடவடிக்கையால் அவர்கள் தமது சுதந்திரமடையமுடிந்தது.

அந்த நிலைமை இப்போ எமக்கும் உண்டு. அதைப்பயன்படுத்தி இக்கருத்துக்கணிப்பு மிக முக்கியமானது. எமது போராட்டம் முள்ளிவாய்க்காலோடு முடிவடையவில்லை என்பதை நாம் சிறீலங்காவிற்கும், இந்தியாவிற்கும், இலங்கைக்கும் உதவிய ஏனைய நாடுகள் அனைத்திற்கும் எமது ஜனநாயக முறையிலான இராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் தெரியப்படுத்தப் படவேண்டும்.

எனவே பிரித்தானியா வாழ் ஈழத்தமிழ் பேசும் மக்களே! வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை அமோக வாக்குக்களால் மீள் உறுதிப்படுத்துவோம். மடைதிறந்த வெள்ளமென, படைபடையாக பெருவாரியாக வாரீர். காலநிலையைக் காரணம் காட்டி வீட்டிலிராது உங்களுக்குக் கிடைத்துள்ள ஒரே ஒரு வாய்ப்பை பயன்படுத்துவது உங்கள் வரலாற்றுக் கடமையும், உரிமையுமாகும். அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே! உங்கள் தீர்வை உலகுக்கு உரக்கச் சொல்லும் தேர்தல் இது. எமது அரசியல் தீர்வை நாமே நிர்ணயிக்க வேண்டும். எமது இராஜதந்திர நடவடிக்கையின் முதற்கட்டமான கருத்துக்கணிப்பு பிரித்தானியாவில் எதிர்வரும் 30,31ம் திகதிகளில் (30,31-01-2010) நடக்க இருக்கின்றது.

உங்கள் வரலாற்றுக்கடமையை மறவாது பெரும் திரளாக வந்து வாக்களித்து புதிய சரித்திரம் படையுங்கள்.

ஈழவர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையிலான சுதந்திர ஈழம் எடுக்கும்வரை எமது ஜனநாயக முறையிலான இராஜதந்திரப் போராட்டம் தொடரப்படவேண்டும். அதற்கான நம்பகத்தன்மையைக் (Legitimation) கொடுப்பதுதான் இக்கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு.

இனி ஒரு விதி செய்வோம்
இனியாவது செய்வோம்

நன்றி

கலாநிதி ஆ. க மனோகரன்.

## பிரித்தானிய வாக்குச்சாவடிகள் POLLING BOOTHS

### Out of London

**Birmingham**

***Shri venketeswara Balaji temple Community***
*hallDudley road East,*
*Tividale NR*
*Birmingham*
*B69 3DU*
*Birmingham and surrounding areas details & other InformationPlease contact:***07951550024, 07810256944, 07536714056**

***Coventry***

***St Paul's Community CentreRoom 1***
*346 Foleshill Road*
*Coventry*
*CV6 5AJ*
***Open Time: 9:00am Closed: 8:00pm***

*Coventry and surrounding areas details & other Information Please contact:***07723451826, 07874221049 & 07872528940**

***Hampshire***

***Oasis Academy Lower School***
*Green Lane*
*Maybush*
*Southampton*
*Hampshire*
*SO16 9RG*
***Open: 10:00am Closed: 4:00pm***
*Hampshire and surrounding areas details & other Information*
*Please contact***07985200763**

***High Wycombe***

***Green Street Youth and Community Centre***
*Desborough Street*
*High Wycombe*
*Buckinghamshire HP11 2RA*
***From 10:00am to8:00pm***
*High Wycombe and surrounding areas details & other InformationPlease contact:***07958086070**

***South Wales***

***Bryn Village Hall***
*Bryngyrnos Street (B4282)*
*Bryn*
*West Glamorgan*
*SA13 2RY*
*South Wales and surrounding areas details & other Information Please contact:***07882602991 / 07852212465 / 075295805049**

***Luton***

***Trinity Hall***
*Trinity Road*
*Luton*
*Bedfordshire*
*LU3 1TR*
***Open Time:10amClosed:7:00pm***
*Luton and surrounding areas details & other Information Please contact:***07940540279**